இலைகள் மறந்த மரங்கள் சொல்லும் காவலரனின் சுவர்கள் சொல்லும் 2
விலைகள் எத்தனை கொடுத்தோம் என்று விம்மி அழுமெம் இதயம் சொல்லும்

நெஞ்சில் புதைந்த பாசத்தினை நனைந்த வீட்டு கதைகள் சொல்லும்
குண்டு விதைத்த சோகத்தினை சிதைந்த நீழும் பனைகள் சொல்லும்
களத்து வாழ்வின் கடினாங்களை கலுத்தில் ஆடும் குப்பி சொல்லும்
நிலத்தின் விடியல் பெறுமதியை ஈரம் காயாத ரத்தம் சொல்லும்

இலைகள் மறந்த மரங்கள் சொல்லும் காவலரனின் சுவர்கள் சொல்லும் 2
விலைகள் எத்தனை கொடுத்தோம் என்று விம்மி அழுமெம் இதயம் சொல்லும்

சிந்த மறந்த புன்னகையை சிரிக்கும் புதிய புக்கள் சொல்லும்
சிந்தி வழிந்த கண் துளியை பொழியும் கருத்த வானம் சொல்லும்
நொந்து பிரிந்த தாயணைப்பை பொந்துக்கிளியின் குஞ்சு சொல்லும்
வெந்து கருகிய வாழ்கையினை சொந்த நிலத்தின் விடிவு சொல்லும்

இலைகள் மறந்த மரங்கள் சொல்லும் காவலரனின் சுவர்கள் சொல்லும் 2
விலைகள் எத்தனை கொடுத்தோம் என்று விம்மி அழுமெம் இதயம் சொல்லும்

எல்லாம் சோகக் கதைகள் சொல்லும் சொல்லும்
நான் சொல்வேன் சொல்வேன் ஈழம் வெல்லும் வெல்லும்